




# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



செவ்வாய், செப்டம்பர் 07.2021 மலர்:09 இதழ்:08


# பாராலிம்பிக் போட்டி: 19 பதக்கங்களுடன் வரலாற்று சாதனை படைத்த இந்தியா

## விநாயகர் சதுர்த்தி அனுமதி கோரி வழக்கு: முடித்து வைத்த உயர் நீதிமன்றம்

## பெரியாரின் பிறந்தநாள் சமூக நீதி நாளாக கொண்டாடப்படும்-முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகள் நிறைவடைந்தன. இந்தப் போட்டியில் 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலத்துடன் முதல்முறையாக 19 பதக்கங்களைப் பெற்று இந்தியக் குழுவினர் சாதனை படைத்துள்ளனர். அவர்களுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஆகஸ்ட் 24 ம்தேதி தொடங்கின. இதில் 162 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர். இந்தியா சார்பில் 54 வீரர், வீராங்கனைகள் விளையாட்டுகளில் பங்கேற்றனர். சுமார் 2 வார காலம் நடந்த பாராலிம்பிக், கண்கவர் கலைநிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நிறைவடைந்தது. நிறைவு விழா அணிவகுப்பில் இந்திய தேசியக் கொடியை துப்பாக்கிச் சுடுதலில் தங்கம் வென்ற வீராங்கனை அவனி லேகாரா ஏந்திச் சென்றார். அவருடன் இந்தியாசார்பில் 11 பேர் அணிவகுப்பில் பங்கேற்றனர்.கடைசி நா இந்தியா 2 பதக்கங்களை கைப்பற்றியது. ஆடவருக்கான பாட்மிண்டன் எஸ்ஹெச் 6 ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவின் கிருஷ்ணா நாகர் ஹாங்காங்கின் மான் ஹை சூவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். அதேவேளையில் எஸ்எல் 4 பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவின் சுஹாஸ் யதிராஜ் —போராடி பிரான்ஸின் லூகாஸ் மசூரிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். சுஹாஸ் யதிராஜ், நொய்டா மாவட்ட நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.இதன்மூலம் பாராலிம்பிக் தொடரில் இந்தியா ஒட்டுமொத்தமாக 5 தங்கம், 8 வெள்ளி 6 வெண்கலத்துடன் 19 பதக்கங்கள் பெற்று பதக்கப் பட்டியலில் 24 வது இடம் பிடித்தது. பாராலிம்பிக் வரலாற்றில் 1968 முதல் இந்தியா பங்கேற்று வருகிறது. கடந்த 2016 —ம்ஆண்டு பாராலிம்பிக் வரை மொத்தமாக 12 பதக்கங்கள் மட்டுமே பெற்றிருந்தது. ஆனால், முதல்முறையாக டோக்கியோவில் இம்முறை 19 பதக்கங்கள் குவித்து வரலாற்று சாதனை படைத்துள்ளது.இதற்கு முன்பு அதிகபட்சமாக 1984 ம் ஆண்டு நியூயார்க் பாராலிம்பிக் மற்றும் 2016 ம் ஆண்டு ரியோ பாராலிம்பிக்கில் தலா 4 பதக்கங்கள் பெற்றிருந்ததே சாதனையாக இருந்தது. இதை முறியடித்து தற்போது முதல்முறையாக இரட்டை இலக்கத்தில் பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர் இந்தியக் குழுவினர். இந்தியா சார்பில் துப்பாக்கி சுடுதலில் அவனி லேகாரா, பாட்மிண்டனில் பிரமோத் பகத், கிருஷ்ணா நாகர், ஈட்டி எறிதலில் சுமித் அண்டில், துப்பாக்கி சுடுதலில்மணீஷ் நார்வால் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

டேபிள் டென்னிஸில் பவினாபென் படேல், துப்பாக்கிச் சுடுதலில் சிங்ராஜ் அதனா, வட்டு எறிதலில் யோகேஷ் கதுனியா, உயரம் தாண்டுதலில் நிஷாத் குமார், மாரியப்பன் தங்கவேலு, பிரவீன் குமார், ஈட்டி எறிதலில் தேவேந்திர ஜஜாரியா, பாட்மிண்டனில் சுஹாஸ் யதிராஜ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியுள்ளனர். மேலும், துப்பாக்கிச் சுடுதலில் அவனி லேகாரா, வில்வித்தையில் ஹர்விந்தர் சிங், உயரம் தாண்டுதலில் சரத் குமார், ஈட்டி எறிதலில் சுந்தர் சிங் குர்ஜார், பாட்மிண்டனில் மனோஜ் சர்கார், துப்பாக்கிச் சுடுதலில் சிங்ராஜ் அதனா ஆகியோர் வெண்கலப் பதக்கம் பெற்றனர். பதக்கப் பட்டியலில் 96 தங்கம், 60 வெள்ளி 51 வெண்கலம் என மொத்தம் 207 பதக்கங்கள் குவித்து சீனா முதலிடம் பிடித்தது. டோக்கியோ பாராலிம்பிக்கில் 19 பதக்கங்கள் குவித்த இந்திய குழுவினருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.



பெரியாரின் பிறந்தநாள் சமூக நீதி நாளாக கொண்டாடப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் புதிய அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சாதி மற்றும் பெண்ணடிமை ஒழிப்பே பெரியாரின் இலக்கு. சமூக நீதி கதவை திறந்தது பெரியாரின் கைத்தடி எனக்கூறிய அவர், இந்தியா முழுவதும் சமூகநீதி நிலவிட காரணம் பெரியாரின் அடித்தளம் தான் என தெரிவித்தார். அவரின் செயல்கள், போராட்டங்கள் குறித்து பேச வேண்டுமானால் அவையை ஒத்தி வைத்துவிட்டு தான் பேச வேண்டும் என தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், ஆண்டுதோறும் பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி சமூக நீதி நாளாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார். முதலமைச்சரின் இந்த அறிவிப்பிற்கு அதிமுக, பாஜக வரவேற்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக பேசிய சட்டப்பேரவை பாஜக குழு தலைவர் நயினார் நாகேந்திரன், சமூக நீதி பாஜகவின் கொள்கைகளில் ஒன்று என கூறினார். பெரியாரின் கொள்கையும் சமூக நீதி தான், அதனால், கடவுள் நம்பிக்கையுடன் முதலமைச்சரின் அறிவிப்பை பாஜக வரவேற்பதாகவும் கூறினார்.

## நீட் தேர்வு ஹால் டிக்கெட் வெளியீடு



செப்டம்பர் 11 ஆம் தேதி நடைபெற உள்ள முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு ஹால் டிக்கெட் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல் செப்டம்பர் 12 ஆம் தேதி நடைபெற உள்ள இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு ஹால் டிக்கெட்டும் வெளியிடப்பட்டுள்ளது. புதிய ஹால் டிக்கெட்டுகளை http://neet.nta.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## விநாயகர் சதுர்த்தி அனுமதி கோரி வழக்கு



விநாயகர் சதுர்த்தி விழாவைக் கொண்டாட உரிய நெறிமுறைகளை வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழக அரசு, கடந்த ஆண்டைப் போலவே கோவில்கள் முன் வைக்கப்படும் சிலைகளை நீர்நிலைகளில் கரைக்க இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்கும் என உறுதி . அளித்துள்ளதுகரோனா பரவலைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் அறிவுறுத்தலின் படி விநாயகர் சிலை ஊர்வலங்கள் மற்றும் பொது இடங்களில் விநாயகர் சிலை வைப்பதற்குத் தமிழக அரசு தடை விதித்து இருந்தது. வீடுகளில் சிலைகள் வைத்து வழிபட்டுக் கொள்ளலாம் என அனுமதி அளித்துள்ளது. இந்தநிலையில், இந்து முன்னேற்றக் கழக திருப்பூர் தலைவர் கோபிநாத் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து விநாயகர் சதுர்த்தி விழாவைக் கொண்டாட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்

## கடைகளில் நின்று வேலை செய்பவர்களுக்கு இருக்கைகள் கட்டாயம்



தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஒருமாத காலமாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இதில் பல்வேறு புதிய அறிவிப்புகளைத் தமிழ்நாடு அரசு அறிவித்துவருகிறது. இந்நிலையில் கடைகள் மற்றும் நிறுவனங்களில் நின்று கொண்டு பணியாற்றுபவர்களுக்கு இரு.கைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கான சட்டத்திருத்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கான சட்டமுன்வடிவை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திட்டக்குடி கணேசன் தாக்கல் செய்தார். தமிழகத்தில் கடைகள் மற்றும் நிறுவனங்களில் ஊழியர்கள் வேலைநேரம் முழுதும் நிற்கவைக்கப்படுகின்றனர். இதனால் அவர்களுக்கு பல்வேறு உடல் நலக்கேடுகள் ஏற்படுகிறது. ஏற்கனவே கடந்த 4 ஆம் தேதி நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை ஆலோசனைக் கூட்டத்தில் நின்று வேலை செய்யும் ஊழியர்களுக்கு இருக்கை வழங்க வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையில் இந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் இந்த திருத்தம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.


வேலைக்கு ஆட்கள் தேவை

பிரபல பிரிண்டிங் நிறுவனத்திற்கு அலுவலக பணிக்கு ஆட்கள் தேவை..

இடம்:மயிலாடுதுறை

தொடர்புக்கு..

9597887847

விளம்பர தொடர்புக்கு

8870884969

# பிள்ளையாருக்குத் தமிழகத்தில் இடம் இல்லையா?


## பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சனம்



பிள்ளையாருக்குத் தமிழகத்தில் இடம் இல்லையா என்று கேள்வி எழுப்பியுள்ள பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, விநாயகரைப் பழித்தவர்கள், விநாயகரால் தண்டிக்கப்படுவர் என்றும் விமர்சித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை;தொடர்ந்து பக்தர்களின் மனத்தையும் மதத்தையும் புண்படுத்தி வரும் திமுக ஆட்சியில், விநாயகர் சிலைகள் வைக்கத் தடை விதித்தும், விநாயகர் சிலைகள் தயாரிக்கும் ஏழைக் குயவர்களைக் கைது செய்தும், குறிப்பாக இந்துக்கள் மத்தியில் ஒரு அச்சத்தையும் படபடப்பையும் ஏற்படுத்தி வரும் அரசின் இந்த அராஜக நடவடிக்கைகளை பாஜக வன்மையாக கண்டிக்கிறது. பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்கத் தமிழைத் துங்க கணபதியிடம் இறைஞ்சிய அவ்வையின் பிள்ளையாருக்குத் தமிழகத்தில் இடம் இல்லையா?எதை எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கும் தமிழரின் பழக்கத்தையும் எந்த ஒரு செயலைத் தொடங்கினாலும் விநாயகரை வழிபட்டு தொடங்கும் வழக்கத்தையும் நம் தமிழர்கள் மரபுவழி கொண்டிருக்கிறார்கள். அந்த விநாயகரை வழிபடத் தடை விதிப்பது தனிமனித அத்துமீறல் இல்லையா?பாலகங்காதர திலகர் புனேவில் 1983 ஆம் ஆண்டு, பொதுவெளியில் பந்தல் போட்டு விநாயகரை வழிபடும் முறையை ஏற்படுத்தினார். சுதந்திரப் போரில் பொதுமக்களை ஒன்றுதிரட்ட, அவர் செய்த இந்த புதிய முயற்சி மிகப் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்து, விடுதலையை வென்று தந்தது. அதைத் தந்த கணபதிக்குத் தமிழகத்தில் இடம் இல்லையா?புதுச்சேரி, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் எல்லாம் விநாயகர் வழிபாட்டிற்கு எந்தத் தடையும் இல்லாதபோது, இங்கு மட்டும் கட்டுப்பாடுகள் கூட விதிக்காமல், முழுமையாகத் தடை விதிக்கக் காரணம் என்ன? தமிழரின் தொன்மையான விநாயகர் வழிபாட்டை மதிக்காமல், முழுமுதற் கடவுளை மதிக்காமல், தொடர்ந்து பக்தர்களை அவமானப்படுத்தினால் மாற்று மதத்தினிரின் ஓட்டுகளைச் சம்பாதிக்கலாம், ஆதரவைப் பெருக்கலாம் என்ற நோக்கத்தில் இந்த அவல முடிவு எடுக்கப்பட்டதா? கடலூர் மாவட்டத்தில் விநாயகர் சிலை செய்பவர் திருப்பாப்புலியூர் காவல் அதிகாரி மூலம் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். கடவுள் சிலை செய்வது சட்டப்படி குற்றமா? தமிழர்கள் தங்கள் விருப்பமான கடவுளை வழிபடுவதற்கு முதல்வரின் அனுமதி வேண்டுமா? தங்கள் இல்லத்தில் இறை வழிபாடு செய்யும் தமிழர்கள் மீது ஏன் இத்தனை வன்மம் திமுகவுக்கு தமிழகக் காவல்துறையினர் தங்கள் கண்ணியத்தையும் கடமையையும் மறந்து கைது. மிரட்டல் நடவடிக்கைகளில் இறங்கி, ஆளும்கட்சியின் கூலிக்காரர்களாகச் செயல்படுவதைக் கண்டிப்பாக ஏற்க முடியாது. அதை பாஜக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது.தமிழக மக்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள். பாஜகவின் சார்பில் ஒரு லட்சம் வீடுகளில் வாசலில் விநாயகர் சிலை வைத்து, விநாயகர் அகவல் பாடி வழிபட இருக்கிறோம், தமிழர்கள் அனைவரும் தங்கள் வீட்டின் வாசலில் உங்கள் கோலத்தின் மீது விநாயகர் சிலையை வைத்து வழிபடுங்கள். வல்லப கணபதியை உங்கள் வாசலுக்கு வரச் சொல்லுங்கள், மூன்று நாட்களும் விநாயகர் அகவலைப் படியுங்கள்.தமிழக முதல்வரே, தொடர்ந்து தமிழர்களை அவமானப்படுத்தி, தனிமனித உரிமையில் தலையிடுகிறீர்கள், விநாயகரைப் பழித்தவர்கள், விநாயகரால் தண்டிக்கப்படுவர். இதைத் தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும், இல்லை என்றால் பிள்ளையார் உங்களுக்குப் புரிய வைப்பார்.தமிழக மக்களுக்கும், பாஜக தொண்டர்களுக்கும் பணிவான வேண்டுகோள். மாற்று மதப் பண்டிகைகளுக்கு மனமார வாழ்த்து சொல்லும் நம் மாநில முதல்வருக்கு விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துகளை நாம் அனைவரும் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பி வைப்போம். பாஜகவின் அனைத்து நிர்வாகிகளும் உறுப்பினர்களும் தமிழக முதல்வருக்கு ஒரு அஞ்சல் அட்டையில் விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

# 12ம் தேதி 10,000 சிறப்பு தடுப்பூசி முகாம்கள்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



தமிழ்நாடு முழுவதும் வரும் 12 ஆம் தேதி 20 லட்சம் பேருக்கு தடுப்பூசிகள் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். சென்னை கோடம்பாக்கம் மீனாட்சி மகளிர் கல்லூரியில் பேராசிரியர்கள், மாணவிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். இதையடுத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்ட பின் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், கல்லூரி மாணவர்களுக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தும் வகையில் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், ஜனவரி 16 முதல் மே 6 வரை இப்போது தடுப்பூசி செலுத்தப்படும் வேகத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிகளவில் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கும். ஆனால், அந்த 103 நாட்களில் 63 லட்சம் பேருக்கு தான் தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தது. அன்று தடுப்பூசிகளை கேட்டுப் பெறாததன் காரணமாக இன்று தமிழ்நாடு தடுப்பூசி செலுத்திய மாநிலங்கள் வரிசையில்9 வது இடத்தில் இருக்கிறது என தெரிவித்தார். மேலும், தமிழ்நாடு, கேரளா எல்லையில் மக்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பது கடினமான ஒன்று. ஆனால், அதிகாரிகள் இதை திறம்பட கையாண்டு வருகின்றனர். கேரள எல்லையை ஒட்டிய 9 மாவட்டங்களில் 100 % தடுப்பூசி செலுத்துவதை இலக்காக வைத்து அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் வரும் 12 ம் தேதி 10,000 சிறப்பு தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட உள்ளது என கூறினார்.

# மருத்துவமனையில் சத்ரியன் படம் பார்த்த விஜயகாந்த்



தேமுதிக கட்சியின் நிறுவனத் தலைவரும்,பொதுச்செயலாளருமான விஜயகாந்த் சிகிச்சைக்காக துபாய் சென்றுள்ளார்.அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள விஜயகாந்துக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றன.இந்த நிலையில் விஜயகாந்த் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் நான் நல்ல உடல் நலத்துடன் உள்ளேன். நான் நடித்த "சத்ரியன்" திரைப்படத்தை எனது சிகிச்சைக்கு உதவிபுரியும் செவிலியர் சகோதரிகளுடன் பார்த்த போது எடுத்த படம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் இலவசமாக மொட்டை மட்டும்தான் கிடைக்கும்.



9 மாவட்டங்களின் ஊரக உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் மாநிலத் தேர்தல் ஆணையம் செப்.06 ஆலோசனை நடத்துவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நண்பகல் 12 மணியளவில், சென்னை அரும்பாக்கத்தில் உள்ள மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகத்தில் மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர் பழனிகுமார், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில், அதிமுக சார்பாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கலந்து கொண்டார். கூட்டத்துக்குப் பின் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலைக் காலக்கெடுவுக்குள் முடிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளதால், மேலும் அவகாசம் கோரி மாநிலத் தேர்தல் ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த ஜெயக்குமார், எங்கள் ஆட்சி பயந்துகொண்டு தேர்தலைத் தள்ளிவைப்பதாக திமுக அப்போது சொன்னது. இப்போது இவர்களும் பயத்தினால்தான் தேர்தலைத் தள்ளிப்போட முயல்கின்றனரா. தேர்தல் நேரத்தில் வாய்க்கு வந்தபடி வாக்குறுதிகளை திமுக அளித்தது. நீட் விலக்கு, மகளிருக்கு ரூ.1000 உரிமைத்தொகை, முதியோருக்கு ரூ.1,500 ஆக உதவித்தொகை உயர்த்தப்படும், டீசல் லிட்டருக்கு ரூ.4 குறைப்பு, கல்விக் கடன் ரத்து, நகைக் கடன் ரத்து என, எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ன்றைக்குத் தமிழகத்தில் இலவசமாக மொட்டை மட்டும் அடித்துக் கொள்ளலாம். தமிழக மக்கள் முழுமையாக மொட்டை அடிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மொட்டை மட்டும்தான் இலவசமாகக் கிடைக்கக்கூடிய ஒன்று எனத் தெரிவித்தார்.

அகர முதல உரக்க சொல்வோம்
WE ARE HIRING!!!
வேலைக்கு ஆட்கள் தேவை
பிரபல பிரிண்டிங் நிறுவனத்திற்கு அலுவலக பணிக்கு ஆட்கள் தேவை..
இடம்:மயிலாடுதுறை
தொடர்புக்கு..
9597887847
விளம்பர தொடர்புக்கு
8870884969

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல உரக்க சொல்வோம்
அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு





# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969

செவ்வாய், செப்டம்பர் 07,2021 | மயிலாடுதுறை | மலர்:09 இதழ்:08

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நல்லாசிரியர் விருது வழங்கும் விழா

# மாவட்ட ஆட்சியர் லலிதா, எம்.எல்.ஏ ராஜ்குமார் பங்கேற்பு



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் டாக்டர்.ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் லலிதா தலைமை வகித்தார் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் முன்னிலை வகித்தார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் லலிதா ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கி சிறப்புரையாற்றினார்.கல்விக்கும் தமிழுக்கும் புகழ் சேர்க்கும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குகின்ற கடமை ஆசிரியர்களுக்கு இருக்கிறது. ஆசிரியர் தினத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவர்களையும் நல்ல புத்திசாலியாக உருவாக்குகிற பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. போட்டித் தேர்வில் பங்கேற்க மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.கொரோனா நோய் பெருந்தொற்று காலகட்டத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இணைய வழியில் கல்வி பயிற்றுவித்து வருகிறார்கள். இது மிகப் பெரிய சவாலாக இருந்தாலும், இணைய வழி கல்வி பயிற்றுததிலும் ஆசிரியர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இணையவழியில் ஆசிரியர்கள் கல்வி பயிற்றுவிக்கும் போது மாணவ, மாணவிகளிடம் கைபேசியை இணைய வழி கல்வி மட்டுமே பயன்படுத்தவும் மற்ற நேரங்களில் கைப்பேசி பயன்படுத்துவதை தவிர்க்கவும் என்று எடுத்துக் கூறவும். மாணவர்களின் எதிர்கால கனவை கல்வியால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் லலிதா தெரிவித்தார். இதைத்தொடர்ந்து சீர்காழி சபாநாயகர் முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளி உடற்கல்வி இயக்குனர் சு.முரளிதரன், சீர்காழி வட்டம் இனம்சீயாளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் செ.சண்முகசுந்தரம், மங்கைமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அ.ராஜசேகர், கொருக்கை அரசு மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் அ.அப்துல் ரஹீம், சீர்காழி விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் பா.ஜோஸ்வா பிரபாகர சிங் ஆகிய 5 ஆசிரியர்களுக்கு தலா ரூபாய் 10 ஆயிரத்திற்கான காசோலை, வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் அடங்கிய நல்லாசிரியர் விருதினை மாவட்ட ஆட்சியர் லலிதா வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் மதிவாணன் மாவட்ட கல்வி அலுவலர் குமார் மாவட்ட ஆட்சியராக மேலாளர் சங்கர் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பேஸ்புக்கை இப்படித்தான் பயன்படுத்த வேண்டும்-எஸ்பி-டிப்ஸ்

பேஸ்புக்கை பாதுகாப்பாக பயன்படுத்தும் வழிமுறைகள் பற்றி மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணாசிங் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். தொழில்நுட்பம் வளர்ந்த நாள் முதல் மனிதர்களுக்கு எந்த அளவிற்கு பயன் அளித்து வருகிறதோ அதே அளவிற்கு அந்த தொழில்நுட்பம் சார்ந்து பல பிரச்னைகளும் பின் தொடர்ந்து வருகிறது. குறிப்பாக சமூக வலைத்தளங்களில் நமக்கு முன்பின் பழக்கம் இல்லாத நபர்கள் நண்பர்களாக பழகி அல்லது வேறு வழியில் மோசடி வேலைகளிலும் சட்டத்திற்கு புறம்பான செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக நாள்தோறும் சமூக வலைதளங்கள் மோசடி குறித்து செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் பேஸ்புக்கை பாதுகாப்பாக பயன்படுத்துவது வழிமுறைகள் பற்றி பொதுமக்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கு.சுகுணாசிங் வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், அவர் கூறும் பாதுகாப்பு வழிமுறைகள்,




இன்றைய காலகட்டத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வயது வித்தியாசம் இன்றி முகநூலை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். நமது வீட்டுக்குள் உறவினர்கள், நண்பர்களைத் தவிர வெளி நபரை அனுமதிக்காததைப் போல, பேஸ்புக்கிலும் கடைப்பிடிக்க வேண்டும். நமது பேஸ்புக்கில் யாரை அனுமதிக்கலாம் என்பதை நாம் முடிவு செய்யலாம். வீட்டைவிட்டு வெளியில் செல்லும்போது வீட்டை பூட்டிவிட்டு செல்வதைப் போல, பேஸ்புக்கிலும் சேப்டி, செக்ரியூட்டியை எனபில் செய்து பாதுகாப்பானது என்பதை உறுதி செய்ய வேண்டும். பேஸ்புக்கில் நண்பர்களோ அல்லது நண்பர்களின் நண்பர்கள் மட்டுமே இணையும் வகையில் பேஸ்புக் செட்டிங்ஸ்ஸை தேர்ந்தெடுக்க வேண்டும். பேஸ்புக்கில் நமது அலைபேசி எண் மற்றும் இமெயில் முகவரியை யாரும் பார்க்காத வகையில் மாற்றி அமைக்க வேண்டும். நாம் பேஸ்புக்கில் இருப்பதை கூகுள், யாகூ போன்ற ஆப்ஸ் மூலம் யாரும் பார்க்க முடியாத வகையில் செட்டிங்ஸ்ஸை பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் உங்களது பேஸ்புக்கை உங்களுக்கு தெரிந்தவர்கள் மட்டுமே பார்க்க இயலும். மேலும், சேப்டி பாராமீட்டர் என்ற இடத்தில், பேஸ்புக், மெசஞ்சர், ஈ—மெயில் என்றிருக்கும் மூன்றையும் செலக்ட் செய்தன்மூலம் உங்களது பாஸ்வேர்டை வெறொருவர் திருட்டுத்தனமாக உள்நுழைய முயற்சிக்கும் போது, நீங்கள் அதனை சுலபமாக கண்டறிய முடியும். மேலும், உங்களது பாஸ்வேர்டை யாரும் சுலபத்தில் யூகிக்க முடியாததாக அமைத்துக் கொள்ளுங்கள். பேஸ்புக்கை பயன்படுத்தும் அனைவரும் மேற்கூறியவற்றை செய்து பேஸ்புக்கை பாதுகாப்பான முறையில் உபயோகப்படுத்துகிறீர்கள் என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ளலாம் என்று அந்த வீடியோவில் கூறியுள்ளார்.

## மயிலாடுதுறை: திமுக மூத்த முன்னோடி சிலை திறப்பு விழா.!

### தமிழ்நாடு அரசு தலைமை கொரடா,மயிலாடுதுறை எம்பி பங்கேற்பு



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் பழைய கொண்டு ஊராட்சியில் மறைந்த திமுக மூத்த முன்னோடி கலியபெருமாள் திருவுருவ சிலை திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம் முருகன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி செழியன் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ் ராஜ்குமார், குத்தாலம் ஒன்றிய குழு தலைவர் மகேந்திரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் கலந்து கொண்டு கலந்து கொண்டு கலியபெருமாள் திருவுருவ சிலையை திறந்து வைத்து திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இதில் முன்னாள் எம்எல்ஏக்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சத்தியசீலன், பால.அருட்செல்வன், ஜெகவீரபாண்டியன் மற்றும் முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் மனோகரன், அருண்பிரியா மருத்துவமனை உரிமையாளர் டாக்டர் செல்வம், பழைய கூடலூர் ஊராட்சி மன்றத் தலைவர் பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.விழா ஏற்பாடுகளை செல்வராஜ், ராமநாதன், ராமநாதன் மற்றும் கலியபெருமாளின் குடும்பத்தினர் செய்திருந்தனர்.




## இலங்கை கடற்கொள்ளையர்களின் தொடர் தாக்குதல்

### நடுக்கடலில் நாகை மீனவர்களை தாக்கி ரூ.4 லட்சம் பொருட்கள் கொள்ளை





இலங்கை கடற்கொள்ளையர்கள் தொடர் தாக்குதலில் ஈடுபட்டுவருகின்றனர். தமிழ்நாட்டு மீனவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து பல லட்சம் ரூபாய் மதிப்புடைய வலைகளைப் பறித்துக்கொண்டு சென்றது மீனவர்கள் மத்தியில் பதற்றத்தை உண்டாக்கியுள்ளது.நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட ஃபைபர் படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். இவர்கள் அனைவருமே கோடியக்கரை தென் கிழக்கே 12 நாட்டிக்கல் கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அங்கு 2 அதிவேக படகுகளில் சீறிக்கொண்டு வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 9 பேர் கீச்சாங்குப்பம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த செல்வகுமார் என்பவருக்கு சொந்தமான ஃபைபர் படகை சுற்றி வளைத்து அச்சுறுத்தியிருக்கின்றனர். படகில் இருந்த கிருஷ்ணராஜ், வேலு, முத்துக்குமார், ரவீந்தர் ஆகிய நான்கு மீனவர்களையும், கத்தி மற்றும் சுளுக்கி கொண்டு தாக்கியுள்ளனர்.அதோடுவிடாமல், கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு கத்திமுனையில் நாகை மீனவர்களின் படகில் இருந்த நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஜிபிஎஸ் உள்ளிட்ட அனைத்து கருவிகளையும் கொள்ளையடித்ததோடு, வலைகளையும் அள்ளிச்சென்றனர். இந்தத் தாக்குதலில் மூன்று மீனவர்களுக்கு கை, கால் உள்ளிட்ட இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. அந்த மீனவர்கள் பலத்த காயத்தோடு நாகை துறைமுகம் நோக்கி கரை திரும்பிக்கொண்டிருந்த நேரத்தில் மற்றொரு சம்பவமாக, கோடியக்கரை அருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தட்சிணாமூர்த்தி என்பவருக்கு சொந்தமான படகையும் சுற்றிவளைத்த இலங்கை கடற்கொள்ளையர்கள், அந்தப் படகில் இருந்த இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள வலைகளையும் பறித்துச் சென்றனர். அடுத்தடுத்து அரங்கேறிவரும் இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதல் தமிழ்நாடு மீனவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

சீர்காழியில் நலம் பாரம்பரிய விவசாய அறக்கட்டளை சார்பில்

# 7 ம் ஆண்டு பாரம்பரிய நெல் திருவிழா



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் நலம் பாரம்பரிய விவசாய அறக்கட்டளை சார்பில் 7 ம் ஆண்டு பாரம்பரிய நெல் திருவிழா ச.மு.இ. மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.விழாவுக்கு, நலம் பாரம்பரிய விவசாய அறக்கட்டளைத் தலைவர் எஸ்.ரெங்கராஜன் தலைமை வகித்தார். சீர்காழி வட்டாட்சியர் சண்முகம், வழக்குரைஞர் எஸ்.சுந்தரய்யா, ச.மு.இ, பள்ளி தலைமையாசிரியர் எஸ்.அறிவுடைநம்பி, விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் கே.வி.ராதாகிருஷ்ணன், திருக்குறள் பண்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் எம்.முத்துக்கருப்பன், ஒருங்கிணைந்த பண்ணையம் கி.காசிராமன், திமுக நகரச் செயலாளர் சுப்பராயன், ஒன்றியப் பொறுப்பாளர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் பங்கேற்ற இயற்கை விவசாயி கோ.சித்தர் பேசும்போது, தமிழகத்தில் 500 மரபு ரக விதைகள் உள்ளன. நாம் உண்ணும் உணவான அரிசி நம்மை காக்கவும், அழிக்கவும் செய்யும், ரசாயன கலப்பு அரிசி வகைகளை சாப்பிடுவதால் பெரும்பாலானோர் ஊட்டச்சத்து இல்லாமல் உள்ளனர். எனவே, நமது பாரம்பரிய நெல்லை மீட்டெடுக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.இதேபோல, மரபு உணவியலாளர் ராஜமுருகன் பேசுகையில், முன்னோர்கள் நமது உணவு எது, அதை எப்போது, எப்படி சாப்பிடவேண்டும் என்பதை வாழ்வியலில் புகுத்தி செயல்பட்டனர் ஆனால், தற்போது இவ்வாறான திட்டமிடல் இல்லை. அடுத்த தலைமுறைக்கு ஆரோக்கியமான உணவை வழங்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இதற்கு, சிறுதானியங்கள், மரபுநெல் அரிசிகளில் சமைத்த உணவை உண்டு வந்தால் ஆரோக்கியமாக வாழலாம் என்றார்.தொடர்ந்து, சீர்காழி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கோட்டாட்சியர் ஜி.நாராயணன், காவல் துணைக் கண்காணிப்பாளர் லாமேக் ஆகியோர் 600 விவசாயிகளுக்கு தலா 2 கிலோ பாரம்பரிய விதை நெல் ரகங்களையும், 5 சிறந்த இயற்கை விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதும் வழங்கினார். இவ்விழாவில், பாரம்பரிய நெல் விவசாயி காரைக்கால் பாஸ்கர் 65 வகையான பாரம்பரிய விதை நெல்களை காட்சிப்படுத்தியிருந்தார். பாரம்பரிய இயற்கை தானியப் பொருள்கள், வேளாண் சார்ந்த அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இதில், நலம் பாரம்பரிய விவசாய அறக்கட்டளை துணைச் செயலாளர் முகம்மது அப்பாஸ் அலி, ராஜசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர் முன்னதாக கரு.முத்து வரவேற்றார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் அறக்கட்டளையின் செயலாளருமான இரா.சுதாகர் நன்றி கூறினார்.

# மயிலாடுதுறை: சூரிய ஒளியைக் கொண்டு ஓவியம் தீட்டும் இளைஞர் குவியும் பாராட்டுகள்



இந்தியாவிலேயே முதன்முதலாக உருப்பெருக்கி கண்ணாடி மூலம் சூரிய ஒளியால் மரப்பலகையை கருக செய்து ஓவியம் படைத்து வருகிறார். மயிலாடுதுறை தோப்பு தெருவை சேர்ந்த 30 வயதான இளைஞர் விக்னேஷ். சன்லைட் வுட் பர்னிங் ஆர்ட் எனப்படும் இந்தக்கலையை கலிபோர்னியாவை சேர்ந்த மைக்கேல் பாப்பாடாகிஸ் என்பவர் தலைசிறந்து விளங்கி வருகிறார். இந்தியாவில் இதுவரை இந்தக்கலையைப் பயன்படுத்தி யாரும் ஓவியம் வரைந்ததில்லை என செல்லப்படுகிறது. இயந்திர உதவியுடன் கணினியை பயன்படுத்தி லேசர் கதிர்மூலம் மட்டுமே ஆங்காங்கே இதுபோன்ற வுட் பர்னிங் ஓவியங்கள் வரையப்பட்டு வருகிறது. கலிபோர்னியாவை சேர்ந்த மைக்கேல் பாப்பாடாகிஸ் சமுக வலைதளங்களில் பின் தொடர்ந்த விக்னேஷ் அந்த கலையின் மீது ஆர்வம் வர தானாக மரபலகையில் சூரிய ஒளியை கொண்டு உருபெருக்கியை பயன்படுத்தி வரைய முயற்சித்து வெற்றி கண்டார். எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் பட்டயபடிப்பு படித்துள்ள விக்னேஷ் தான் படித்த படிப்பிற்கு வேலை கிடைக்காததை அடுத்து சென்னையில் கிடைக்கும் வேலையை செய்துவந்துள்ளார். அப்போது 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடல்நல பாதிப்பால் படுத்த படுக்கையாக இருந்துள்ளார். அந்நேரத்தில் மனசோர்விலிருந்து மீள்வதற்காக ஓவியம் வரையலாம் என்று பொழுது போக்காக ஆரம்பித்த அவரது பணி, வித்தியாசமான சாதனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் உருப்பெருக்கி கண்ணாடியை கொண்டு சூரிய ஒளியை குவித்து தீயை ஏற்படுத்தி மரப்பலகையை கருக செய்து ஓவியம் தீட்டும் பணியில் சிறந்து விளங்கும் மைக்கேல் பாப்பாடாகிஸ் என்பவரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்டு அவரை சமுக வலைதளங்களில் பின் தொடர்ந்து தற்போது அவர் பாணியில் ஓவியங்களை படைத்து வருகிறார். யுடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமுக வலைதளங்களை தனக்கு சாதகமாக்கிகொண்டு தான் வரையும் ஓவியகளை வீடியோவாக பதிவிட்டுள்ளார். அதனை காணும் பலர் பல்வேறு ஊர்களிலிருந்து விக்னேஷை தொடர்பு கொண்டு பாராட்டி வருகின்றனர். ஏழ்மை நிலையில் தீராத தாகத்துடன் தொடர்ந்து தனது கலைகளை படைத்து வரும் இவர் மேலும் நான்குவிதமான சாதனைகளைப் படைத்துவருகிறார். தத்ரூப முப்பரிமாண ஓவியம், அதி தத்ரூபஓவியம், மினியேச்சர், நுண்ஓவியங்கள் போன்றவற்றை செய்துவருகிறார். அதி தத்ரூப ஓவியங்களுக்கு 35 முதல் 50 நாட்களும், சன்லைட் வுட் பர்னிங் ஆர்ட் செய்வதற்கு 2 தினங்கள் முதல் அதிகபட்சம் 5 நாட்கள் வரை ஆவலாக கூறும் விக்னேஷ் கடுமையான வெயில் அடித்தால் தனது பணியை துரிதமாக்கிவிடுகிறது என்கிறார்.சன்லைட் வுட் பர்னிங் ஆர்ட் மூலம் திரைப்படத்துறையினரை வரைந்து அவற்றை சமூக வலைதளங்களில் உலாவ விட்டுவருகிறார். ஏராளமானோர் இந்த இளைஞரை பாராட்டியவண்ணம் உள்ளனர். திரைப்பட நடிகர்களும் அவர்களின் ஓவியங்களுகாக பாராட்டி வாழ்த்துத்தெரிவித்துள்ளனர். முப்பரிமாண ஓவியங்களைக்கண்டு ஓவியர்களே பொறாமை கொள்ளும்படி செய்து அசத்துகிறார். கலைஞரின் உருவத்தை இரண்டே தினங்களில் சன்லைட் வுட் பர்னிங் ஆர்ட் மூலம் செய்து அசத்தினார். அரிசியில் ஓவியம், சாக்பீசில் உருவங்கள், வரலாற்று சின்னங்களை சிறிய உருவமாக செதுக்குதல் போன்றவற்றிலும் ஈடுபட்டுள்ளார். மேலும் அரசு தனக்கு உதவி செய்தால் இந்தக்கலையை அரசு பள்ளி மாணவர்களுக்கும் இலவசமாக கொண்டு செல்ல தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# கொரோனா வைரஸ் நீங்க வேண்டி சுடுகாட்டில் சித்தர் நடத்திய பூஜை



சுடுகாட்டில் மஹாபூஜை செய்து, விநோத வழிபாடு. இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைந்தால் நோய்நீங்கும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு சமாதிக்கும் படையல், அங்கேயே உணவு உண்ட பொதுமக்கள், கொரோனா நீங்க கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சுடுகாட்டில் விநோத வழிபாடு நடைபெற்றது. சத்குரு சித்தர் சுவாமிகளின் 58 வது ஆண்டு சித்தி தினத்தை முன்னிட்டு, சுவாமி ஓங்காரநந்தா என்பவர், தனது சீடர்களுடன் சுடுகாட்டில் சிறப்பு பூஜை மேற்கொண்டார்.சுடுகாட்டில் உள்ள ஒவ்வொரு சமாதிக்கும், பழங்கள், வெற்றிலைப்பாக்கு, இனிப்பு பண்டங்கள் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. அதனையடுத்து, 58 கிலோ அரிசி கொண்டு சாதம் படைக்கப்பட்டு, ஒரே இடத்தில் குவியலாக வைத்து, அதில், சாம்பார், மோர், ரசம், அப்பளம், வடை, பாயசம், பழங்கள், இனிப்புப்பொருட்கள் கொண்டு மஹாபடையல் செய்து மஹா படையலுக்கு தீபாராதனை காட்டப்பட்டது.தொடர்ந்து சுடுகாட்டில் உள்ள ஒவ்வொரு சமாதிக்கும் தனித்தனியே தீபாராதனை காட்டப்பட்டது. கொரோனா நீங்க வேண்டி சிவாய மந்திரத்தை 108 முறை கூறி கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. பொதுமக்களுக்கு படையல் செய்யப்பட்ட உணவுப்பண்டங்கள் அங்கேயே விநியோகம் செய்யப்பட்டது. அவற்றை சுடுகாட்டிலேயே உண்டனர். இது குறித்து சுவாமி ஓங்காரநந்தா கூறும்போது, சுடுகாடு என்பது புனிதமான இடமாகும். இங்கு கண்ணுக்குத்தெரியாத சூட்சும ரூபத்தில், லட்சக்கணக்கான ஆன்மாக்கள் வசிக்கின்றன. அவர்கள் அமைதி அடைய வேண்டும். அவர்கள் அமைதி அடைந்தால், இயற்கை சீற்றங்கள், விபத்துக்கள் ஏற்படாது என்று கூறினார். நிகழ்ச்சியில் மயிலாடுதுறை சட்டமன்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீரபாண்டியன், ஜோதி பவுண்டேஷன் நிறுவனர் ஜோதிராஜன் மற்றும் பொதுமக்கள் பலர் பங்கேற்று வழிபாடு செய்தனர்.

# கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்ட குழாயில் உடைப்பு



சீர்காழி அருகே கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்ட குழாயில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகும் அவலம் ஏற்பட்டுள்ளது . சீர்காழி அருகே அண்ணன் பெருமாள் கோயிலிலிருந்து நாங்கூர் செல்லும் சாலையில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் பைபில் கடந்த சில நாட்களாக உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியேறி வருகிறது. இதனால் கடலோர கிராமங்களுக்கு தண்ணீர் சரிவர செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது . சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் . தண்ணீர் சாலையில் வழிந்து செல்வதால் தார் சாலை பழுது அடைந்து வருகிறது பைப்பிலிருந்து தண்ணீர் வேகமாக வெளியேறுவதால் அப்பகுதி வழியாக சாலையை கடப்பவர்கள் மீது தண்ணீர் தெளித்து வருகிறது . இதனால் பல்வேறு சிரமத்திற்கு அப்பகுதி மக்கள் ஆளாகி வருகின்றனர். பொதுமக்கள் நலன் கருதி மாவட்ட நிர்வாகம் உடனே உடைந்த பைப்பை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மயிலாடுதுறையில் சாலையில் நெல் மூட்டைகளை அடுக்கி விவசாயிகள் சாலை மறியல்



மயிலாடுதுறை மாவட்டத்தில் இந்த ஆண்டு 97 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் நெல்லை கொள்முதல் செய்வதற்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் 87 இடங்களில் மட்டுமே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளது. போதுமான நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாத காரணத்தால் பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் ஆயிரக்கணக்கான மூட்டைகளுடன் காத்திருக்கின்றனர். மங்கைநல்லூர் அடுத்த தத்தங்குடி கிராமத்தில் கடந்த 9 ஆண்டுகளாக இயங்கி வந்த நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கபடாதகாரணத்தால் விவசாயிகள் சொந்த செலவில் தகரக் கொட்டகை அமைத்து 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட நெல் மூட்டைகளுடன் காத்திருக்கின்றனர். நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாத காரணத்தால் மங்கைநல்லூர் கடைவீதியில் மயிலாடுதுறை திருவாரூர் சாலையில் விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் நெல் மூட்டைகளை வீதியில் அடுக்கி அதன்மேல் அமர்ந்து அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். இதனால் 3 மணி நேரத்துக்கும் மேலாக மயிலாடுதுறை திருவாரூர் இடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

## வ.உ.சிதம்பரனார் பிறந்தநாளை முன்னிட்டு

# ஜோதி பவுண்டேஷன் சார்பில் பனை விதை நடும் விழா..!



கப்பல் ஓட்டிய சுதந்திர போராட்ட தியாகி வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஜோதி பவுண்டேஷன் சார்பில் தமிழக அரசால் பாதுகாக்கபடும் பனைமரம் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நாட்டுப்புற கலைஞர்கள் வ.உ.சிதம்பரனார் வேடமிட்டு 2 ஆம் கட்ட பனை விதை நடும் விழாவும், பொதுமக்களுக்கு பனை விதைகளை வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.இந்நிகழ்ச்சியில் ஜோதி பவுண்டேஷன் நிறுவனர் ஜோதி ராஜன், தலைவர் சேகர், பகவதி குமார், செயலாளர் மணிகண்டன், பொருளாளர் செந்தில்நாதன், ரோட்டரி சரவணன், செயற்குழு உறுப்பினர்கள் ஆண்டவர் சுகுமார் வாட்ச் வெங்கடேசன் பலராமன், ராஜரத்தினம், பழனிச்சாமி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
Aagaramuthalaa
aagaramuthalaa@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு